சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை – 08.
ந.க.எண். 004716/அ3/2024, நாள். 03.07.2024.

| | | |
|---|---|---|
| பொருள் | | பள்ளிக் கல்வி – தேசிய நல்லாசிரியர் விருது – 2024-2025 விண்ணப்பங்கள் இணைய தளம் வழியாக பதிவேற்றம் செய்தல் – ஆசிரியர்கள் இணையதளம் வாயிலாக 27.06.2024 முதல் 15.07.2024 முடிய விண்ணப்பிக்க கோருதல் – சார்பு. |
| பார்வை | 1 | Joint Secretary, Ministry of Education Department of School Education & Literacy New Delhi, Letter No.F,1-7/2024- NAT. Dated. 27.06.2024 |
| | 2 | சென்னை – 06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணைஇயக்குநரின்(இடைநிலை) செயல்முறைகள் ந.க.எண்.040011/ஐ/இ1/2024, நாள். 01.07.2024. |

.................

மேற்காண் பொருள் சார்ந்து பார்வை 2 – ல் காணும் சென்னை – 06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணைஇயக்குநரின்(இடைநிலை) செயல்முறைகளின்படி, பார்வை 1 – ல் காணும் புதுதில்லி, மனிதவள மேம்பாட்டுத்துறை இயக்குநரின் கடிதத்தில் 2024–2025 ஆம் ஆண்டிற்கான தேசியி நல்லாசிரியர் விருதிற்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் அவர்தம் விவரங்களை நேரடியாக http://national awardstoteachers.education.gov.in என்ற இணையதளம் மூலம் 27.06.2024. முதல் 15.07.2024 முடிய விண்ணப்பித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இணைப்பில் காணும் நெறிமுறைகளை பின்பற்றி மேற்காண் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் மற்றும் புதுதில்லி, மனிதவள மேம்பாட்டுத்துறை இயக்குநரின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நாளான 15.07.2024 க்குள் தகுதியுள்ள ஆசிரியர்கள் மேற்காண் இணையதளத்தில் உள்ள படிவத்தில் தகுந்த ஆதாரங்களுடன் விண்ணப்பித்திடுமாறு அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், தங்கள் பள்ளியில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் தெரிவித்து தகுதியான ஆசிரியர்களை விண்ணப்பிக்க அறிவுறுத்துமாறு அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு வழிகாட்டு நெறிமுறைகள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை – 08.

பெறுநர்
அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
சென்னை மாவட்டம்.

நகல்

1. சென்னை – 06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(இடைநிலைக் கல்வி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம். தகவலுக்காக அனுப்பப்படுகிறது.